சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை

# சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்

## மானியக் கோரிக்கை எண். 15



## அறிவிப்புகள் 2023 – 2024

## சிவ. வீ. மெய்யநாதன்

சுற்றுச்சூழல் மற்றும்
காலநிலை மாற்றத்துறை அமைச்சர்

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம்
மற்றும் வனத்துறை

# சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்

## மானியக் கோரிக்கை எண். 15

# அறிவிப்புகள்
# 2023 - 2024


**சிவ. வீ. மெய்யநாதன்**

சுற்றுச்சூழல் மற்றும்
காலநிலை மாற்றத்துறை அமைச்சர்

## சுற்றுச்சூழல் மற்றும்
## காலநிலை மாற்றம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை சார்பில் 15 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

**சிவ. வீ. மெய்யநாதன்**
சுற்றுச்சூழல் மற்றும்
காலநிலை மாற்றத்துறை அமைச்சர்

## 1) காலநிலை மன்றங்கள் (Climate Clubs)

தமிழ்நாடு அரசு 11000 சூழல் மன்றங்களை பல்வேறு பள்ளிகளில் 1998 முதல் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பணிகளுக்காக உருவாக்கியுள்ளது. மேற்கண்ட சுற்றுச்சூழல் மன்றங்களில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ள அம்மன்றங்களை புதுப்பிப்பதும், அவற்றின் பணிகளில் மாற்றம் செய்ய வேண்டியதும் அவசியமாகிறது.

தமிழ்நாட்டை காலநிலை மாற்றத்தை சிறப்பாக எதிர்கொள்ளும் மாநிலமாக உருவாக்குவதற்காகவும், இளைய தலைமுறையினர் மத்தியில் காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், தற்போது உள்ள சூழல் மன்றங்கள், காலநிலை மன்றங்களாக மாற்றி அமைக்கப்படும். இம்மன்றங்களில் வழக்கமான மன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் கலந்துரையாடல் அமர்வு, பரிசோதனை அடிப்படையில் கற்றுணர்தல், வினாடி வினா போட்டிகள் ஆகியவை நிகழ்த்தப்படும்.

## 2) பசுமை நகரக் குறியீடு (Green Indexing of Cities)

தமிழ்நாட்டில் நகர்மயமாதல் பல ஆண்டுகளாக சீராக அதிகரித்துக்கொண்டே வருகிறது. 2001 மற்றும் 2011–ஆம் ஆண்டுகளில் நகர்ப்புற மக்கள் தொகை 30 சதவீதம் அதிகரித்துள்ளது. இதனால் சுற்றுச்சூழல் பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் ஏற்படுகிறது.

இந்தப் பிரச்சனைகளை நன்கு புரிந்து கொள்வதற்கும், காலநிலை மாற்றத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கும், தமிழ்நாட்டில் உள்ள நகரங்களின் சுற்றுச்சூழல் செயல்திறனை மதிப்பிடுவதற்கும், இந்நகரங்களுக்குள் நேர்மறையான போட்டியை ஊக்குவிக்கவும் அந்நகரங்களின் பசுமைக் குறியீட்டின் (Green Index) அடிப்படையிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட தர அளவீடுகளின் அடிப்படையிலும் இந்த நகரங்கள் தர வரிசைப்படுத்தப்படும். இத்திட்டம் **ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில்** செயல்படுத்தப்படும்.

இந்த தரவரிசைப்படுத்தலில் உயர் குறியீடு பெறும் நகரம் அங்கீகரிக்கப்பட்டு அந்த ஆண்டுக்கான காலநிலை தூதராக (Ambassador) அறிவிக்கப்படும்.

## 3) காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான திட்டங்கள் மற்றும் தீர்வுகளுக்கு நிதியுதவி

காலநிலை மாற்றத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கும், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளுக்கு தீர்வு காண்பதற்கும், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பணிகளில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கேற்ற புதுமைகளை புகுத்துவதற்கும் **10 கோடி ரூபாய் மதிப்பீட்டில்** ஒரு பசுமை நிதி உருவாக்கப்படும். இந்த நிதி மூலம் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்காக உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து சிறந்த திட்டங்கள் மற்றும் தீர்வுகளை பெற்று அப்பணிகளுக்கான நிதியுதவி அளிக்கப்படும். இதனால் வரும் ஆண்டுகளில் தமிழ்நாடு குறைவான கார்பன் உமிழ்வை அடையும்.

## 4) காலநிலைக்கேற்ற வாழ்வியல் முறை

நமது வாழ்க்கையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த சிறந்த வாழ்வியல் நடைமுறைகளை பின்பற்றவும் மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான திறன்மிகு மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கும் நோக்கத்தின் அடிப்படையிலும், ஒன்றிய அரசின் சூழலுக்கு உகந்த வாழ்வியல் முறை (Mission LIFE) என்ற கருத்தாக்கத்தின் கீழ் "காலநிலைக்கேற்ற வாழ்வியல் முறை" என்ற திட்டம் **ரூ.50 இலட்சம் செலவில்** தமிழ்நாடு அரசால் நடைமுறைப்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் கீழ், பொதுமக்கள் பெருமளவில் திரளும் இடங்களான விழாக்கூடங்கள், திருமண மண்டபங்கள் மற்றும் சமுதாயக் கூடங்களுக்கு "சூழலுக்கு உகந்த வாழ்வியல் சான்றிதழ்" வழங்கப்படும். மேற்கூறிய மையங்களின் கழிவு மேலாண்மைத் திறன், ஆற்றல் சேமிப்பு, கழிவுநீர் மறுசுழற்சி, சுகாதாரம் மற்றும் தூய்மை போன்றவற்றை சிறப்பாக கையாளும் திறன் மற்றும் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு இச்சான்றிதழ் வழங்கப்படும்.

## 5) இராஜபாளையம் மற்றும் இராமேஸ்வரம் நகராட்சிகளை கரிம மாசு இல்லாத நகராட்சிகளாக உருவாக்குதல்

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக இராஜபாளையம் மற்றும் இராமேஸ்வரம் நகராட்சிகளை கரிம மாசு இல்லாத நகராட்சிகளாக உருவாக்குவதற்காக தமிழ்நாடு அரசு ஒரு சிறப்புத் திட்டத்தை செயல்படுத்த உள்ளது.

எரிசக்தி பயன்பாட்டில் புதுமையான நடவடிக்கைகள், குறைந்த கார்பன் உமிழ்வை ஏற்படுத்தும் வாழ்க்கை முறை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மின் வாகனங்கள் மின்னூட்டம் (சார்ஜ்) ஏற்றிக்கொள்வதற்கான நிலையங்கள் அமைத்தல், உயிரி தொழில்நுட்பம் மூலமாக கழிவுப்பொருட்களை அகற்றுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மூலமாக இராஜபாளையம் மற்றும் இராமேஸ்வரம் நகராட்சிகள் கரிம மாசு இல்லாத நகராட்சிகளாக உருவாக்கப்படும்.

## 6) பசுமைப் பள்ளிக்கூடத் திட்டம் (Green School Programme)

காலநிலை மாற்றம் என்பது தற்போது ஒரு தவிர்க்க இயலாத பிரச்சனை என்பதால் இளைய தலைமுறையினர் இது குறித்து அறிந்துகொள்வதும், அதன் விளைவுகளை ஏற்பதற்கும், அதனால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்வதற்கும் இளைய தலைமுறையினரை தயார் செய்வது அவசியமான ஒன்றாகும். இதனை கருத்தில் கொண்டும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் பசுமை தமிழ்நாடு திட்டத்தின் குறிக்கோளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான சூழல் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்வதற்காகவும் 2022-2023 ஆம் ஆண்டில் 25 பள்ளிகள் பசுமை பள்ளிக்கூடங்களாக தேர்வு செய்யப்பட்டு, அப்பள்ளிகளில் தலா 20 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டப் பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, 2023-2024 ஆம் ஆண்டிலும் தமிழ்நாட்டில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேலும் 50 பள்ளிகளில் தலா 20 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 7) மாண்புமிகு முதலமைச்சரின் நீர்நிலை பாதுகாவலர் விருது (Hon'ble Chief Minister's Waterbody Conservator Award)

தமிழ்நாட்டின் சுற்றுச்சூழலை சிறப்பான முறையில் பாதுகாக்க தமிழ்நாட்டின் நீர்நிலைகளை முறையாக பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும். பல தனியார் தொண்டு அமைப்புகளும் தனிநபர்களும் உள்ளூர் அளவில் நீர்நிலைகளை பாதுகாப்பதில் சிறப்பான பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இவர்களின் பணிகளை அரசளவில் அங்கீகரிக்கும் பொருட்டு, தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களில் நீர்நிலைகளை சிறப்பாக பாதுகாக்கின்ற மற்றும் மேம்படுத்துகின்ற 100 நபர்களுக்கு "மாண்புமிகு முதலமைச்சரின் நீர்நிலை பாதுகாவலர் விருது" வழங்கப்படும். அதன்படி ஒரு நபருக்கு **ரூபாய் ஒரு லட்சம் வீதம் ரூபாய் ஒரு கோடி செலவில்** இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 8) தமிழ்நாடு குறுங்காடுகள் திட்டம் – காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்காக நாட்டு மரங்கள் கொண்ட 1000 குறுங்காடுகள் உருவாக்குதல்

குறுங்காடுகள் இயற்கையாகவே காலநிலை மாற்ற பாதிப்புகளை எதிர்கொள்வதிலும், காலநிலை மாற்ற மேலாண்மை செயல்திட்டங்களிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்த குறுங்காடுகள் திட்டத்தின் கீழ் நாட்டு மரங்கள் கொண்ட 1000 குறுங்காடுகள் தொழிற்சாலைகளால் உருவாக்கப்படும். இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பசுமை தமிழ்நாடு திட்டத்தின் இலக்கு மற்றும் நோக்கங்களை அடைய உதவும் விதமாக செயல்படுத்தப்படும்.

## 9) சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம் அமைத்தல்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலக கட்டிடத்தின் அருகில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஒற்றை பயன்பாடு பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றான சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்கள் போன்ற பசுமை திட்டங்களுக்கான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம் மற்றும் மேம்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், திடக்கழிவுகள், மருத்துவக் கழிவுகள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் மேலாண்மையை நிகழ்நேர அடிப்படையில் தொடர்ந்து கண்காணிக்க ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு காணொளி அரங்கம் ஆகியவை சூரிய ஆற்றல் பயன்பாடு, மழை நீர் சேகரிப்பு அமைப்பு, இயற்கை வனப்பு, திடக்கழிவு மேலாண்மை மற்றும் உரமாக்கல், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், எரி சக்தி சேமிப்பு விளக்குகள் போன்ற வசதிகளுடன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் அமைக்கப்படும்.

## 10) கழிவு உற்பத்தியாளர்கள் மற்றும் பயனர்களுக்கு இடையே கழிவுகளை பரிமாறிக்கொள்வதற்கு இணையவழி கழிவு பரிமாற்ற தளம் (Waste Exchange Bureau) அமைத்தல்

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் தீங்கு விளைவிக்கும் கழிவுகள், நெகிழி கழிவுகள், மின்னணுக் கழிவுகள், எரிகலன் கழிவுகள் மற்றும் டயர் கழிவுகளின் அளவைக் காட்சிப்படுத்தவும் சந்தைப்படுத்தவும், கழிவு மேலாண்மை அமைப்பிற்கு உதவும் ஒரு இணையவழி பரிமாற்ற தளம் (Waste Exchange Bureau) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் அமைக்கப்படும்.

இத்தளம் கழிவுகளை ஆதாரத்திலேயே பிரிப்பதை ஊக்குவிப்பதோடு, நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பை (Extended Producer Responsibility) நிறைவேற்ற தொழிற்சாலைகளுக்கு உதவும். மேலும் இது கழிவு மேலாண்மை துறையில் புதிய வணிகங்களுக்கும் (Startups) வழிவகுக்கும்.

## 11) சுழற்சி பொருளாதாரத்தில் (Circular Economy) குப்பை சேகரிப்பவர்களின் பங்களிப்பினை முதன்மைப்படுத்துவதற்கான திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல்

சென்னை மாநகரத்தில் உள்ள குப்பை சேகரிப்பவர்களை (Rag Pickers) கணக்கெடுத்து, அவர்களின் திறனை மேம்படுத்த பயிற்சி வழங்கப்படும். குப்பை சேகரிப்பவர்களுக்கு கழிவு மேலாண்மை, உடல் நலம், சமூக பாதுகாப்பு, சமூக பொறுப்புணர்வு, நிதிக் கல்வி முதலியவற்றை உள்ளடக்கிய முழுமையான பயிற்சியாக இது அமையும்.

இப்பயிற்சிகளின் மூலம் குப்பை சேகரிப்பு அதிகப்படுத்தப்பட்டு சுழற்சி பொருளாதாரம் (Circular Economy) மேம்படுத்தப்படும். மேலும் அவர்களின் சமுதாய பொருளாதார நிலையும் மேம்படும். குப்பை சேகரிப்பவர்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் இத்திட்டம் **ரூபாய் 1 கோடி செலவில்** நிறைவேற்றப்படும்.

## 12) கடல் வாழ் பல்லுயிரினங்களைப் பாதுகாக்கும் பொருட்டு பயன்படுத்தி தூக்கி எறியப்படும் மீன்பிடி வலைகளைச் சேகரித்து மறுசுழற்சிக்கு அனுப்புவதற்கான திட்டம் (TN Fishnet Initiatives)

பயன்படுத்தி தூக்கி எறியப்படும் மீன்பிடி வலைகளால் கடல் மாசுபடுவதோடு மட்டுமல்லாமல் கடல் வாழ் உயிரினங்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது.

இதனை தவிர்ப்பதற்கு மீன்பிடி வலைகளை மீட்டெடுத்து மறுசுழற்சிக்கு அனுப்புவதற்கான சேகரிப்பு மையங்கள் (Collection Centres) ஏற்படுத்தப்படும். மீன்பிடி வலைகளை நிலையான முறையில் அப்புறப்படுத்தும் மையங்களாக இவை செயல்படும். மீன்பிடி வலைகளை தயாரிக்கும் உற்பத்தியாளர்களின் நீட்டிக்கப்பட்ட பொறுப்பிற்கு (Extended Producer Responsibility) உதவும் இத்திட்டம், **ரூபாய் 1 கோடி செலவில்** நிறைவேற்றப்படும்.

## 13) மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு, ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியம் (NABL) மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அங்கீகாரம் பெறுதல்

சர்வதேச அங்கீகாரம் பெறுவதற்காகவும், ஆய்வறிக்கையின் மீதான நம்பகத்தன்மையை அதிகரிப்பதற்காகவும், மறுசோதனை செய்வதற்கான தேவையைக் குறைப்பதற்காகவும், நேரம் மற்றும் செலவீனங்களை குறைப்பதற்காகவும், திருச்சி, வேலூர் மற்றும் திருநெல்வேலியில் உள்ள மூன்று மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு, ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தின் (National Accreditation Board for Laboratories) அங்கீகாரம் மற்றும் சேலத்தில் உள்ள மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்திற்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986-ன் கீழ் அங்கீகாரம் **ரூபாய் மூன்று கோடி செலவில்** பெறப்படும்.

## 14) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் எட்டு மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களில் நுண்ணுயிரியல் பகுப்பாய்வு பிரிவு (Microbiological Analysis Wing) ஏற்படுத்துதல்

ஆறுகள், நீர்நிலைகள் மற்றும் அன்றாட கழிவுநீரில் உள்ள நுண்ணுயிர் காரணிகளை பகுப்பாய்வு செய்யவும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்யவும், நீர்நிலைகளின் தன்மை மற்றும் சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டறியவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் எட்டு மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களில் நுண்ணுயிரியல் பகுப்பாய்வு பிரிவு (Microbiological Analysis Wing) **ரூபாய் நான்கு கோடி செலவில்** ஏற்படுத்தப்படும்.

## 15) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மாசினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மண் தர வரைபடம் (Soil Quality Mapping) தயாரித்தல்

தமிழ்நாட்டில் மாசினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கண்டறியவும், அப்பகுதிகளில் பாதிக்கப்பட்ட மண் தரத்தினை தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அறிந்து, மரங்களை நட்டு மறுசீரமைப்பு செய்வதற்காக, இப்பகுதிகளில் மண்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு இயற்பியல், இரசாயன மற்றும் உயிரியல் மாசு அளவுகளை ஆய்வு செய்து, மாசுபடுத்தும் காரணிகள் பற்றிய தரவுத்தளத்தை உருவாக்கி, உயர் தெளிவுத்திறன் கொண்ட செயற்கைக்கோள் தரவைப் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட பகுதிகளின் மண் தர வரைபடம் (Soil Quality Mapping) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து **ரூபாய் மூன்று கோடி செலவில்** தயாரிக்கப்படும்.

**சிவ. வீ. மெய்யநாதன்**
**சுற்றுச்சூழல் மற்றும்**
**காலநிலை மாற்றத்துறை அமைச்சர்**



'முடியுமா நம்மால்' என்பது
'தோல்வி'க்கு முன்பு வரும் தயக்கம்.
'முடித்தே தீருவோம்' என்பது
'வெற்றி'க்கான தொடக்கம்.

– முத்தமிழறிஞர் கலைஞர்